# வடகிழக்கு மாகாணசபையை கலைக்குமாறு யாழ். ஆயர் ஜனாதிபதிக்குக் கடிதம்

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 56 ஞாயிறு 01-04-1990 (பங்குனி 19) ரம்ழான் 04

வடக்கு - கிழக்கு மாகாணசபையை உடனடியாக கலைக்குமாறும், தேர்தலை உடனடியாக நடாத்த ஆவன செய்யுமாறும் கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண. தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மாகாணசபையை கலைக்காததினாலேயே சட்டம் ஒழுங்கை கவனிக்க சட்டப்படி ஒருவரையும் நியமிக்க முடியாதுள்ளது. முன்னைய மாகாணசபை நிர்வாகத்தினாலும் இந்தியப்படைகளினாலும் சட்டம் ஒழுங்கை நிர்வகிக்க முடியாமல் போய்விட்டது. ஆலயங்கள் மட்டுமல்ல பக்தர்கள்கூட அவர்களினால் தாக்கப்பட்டனர் எனவும் யாழ். ஆயர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

# 'பஞ்சாப் தீவிரவாதிகளுடன் நாம் பேச்சு நடத்தவில்லை' - புலிகள் மறுப்பு

(சென்னை)

பஞ்சாப் காலிஸ்தான் தீவிரவாதிகளுடன் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளி ஒருவர் பேச்சுக்கள் நடாத்தியதாக கூறப்படும் ஓர் சம்பவம் குறித்து நேற்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் விவாதம் நடைபெற்றது, விவாதத்தின் முடிவில் முதலமைச்சர் கருணாநிதி பேசுகையில் இச்சம்பவம் குறித்து தமிழக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது இந்தியாவின் ஒற்றுமைக் குலைப்பை அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்டார் இதே சமயம் இச்சம்பவம் குறித்த செய்தியை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர் அப்படி யாராவது காலிஸ்தான் விடுதலை அமைப்புடன் பேச்சுகளைநடாத்தியிருந்தால் சம்பந்தப்பட்டவருக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டது,

## யாழ் மாவட்டத்தில் வேலையற்ற பெண்கள் 140 ஆயிரம் பேர் ஆண்கள் 60 ஆயிரம் பேர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒருலட்சத்து நாற்பதினாயிரம் பெண்கள் வேலைவாய்ப்பு இன்றி உள்ளதாக அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. அத்துடன் 60 ஆயிரம் ஆண்கள் யாழ் மாவட்டத்தில் வேலையற்று உள்ளார்கள். ஆனால் தொழிற்துறையைப் பொறுத்தவரையில் கைத்தொழில் துறையில் பெண்கள் முன்னேறி வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (03)

## அதிபர்களை தெரிவு செய்யும் நேர்முகப்பரீட்சை கொழும்பில்

(முள்ளியான்)

அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில சித்தியடைந்தவர்களுக்கு கொழும்பில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற உள்ளன.

1ம், 2ம், 3ம்தர அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை கடந்த வருடம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது,

—8ஆம் பக்கம் பார்க்க

## இன்று கடற்றொழிலாளர் கருத்தரங்கு

கடற்றொழில் பிரச்சினை சம்பந்தமான கூட்டம் ஒன்று இன்றுமனோகராதியேட்டரில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில் சம்பந்தமான அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்களை கலந்துகொள்ளும்படி விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (03)

## கருணாநிதி கோபாலசாமி யாழ்ப்பாண நகரில்

தமிழ்நாடு முதலமைச்சர் மு கருணாநிதி நேற்று மாலை இந்திய விமானம் ஒன்றில் பலாலி விமான நிலையம் வந்துசேர்ந்தார் இவருடன் தி மு க. எம். பி, வை. கோபாலசாமியும் வந்திருந்தார். தற்போது தமிழ்ப் பகுதிகளில் நிலவும் அமைதியையடுத்தும் புலிகளின் முக்



கிய பிரமுகர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்த செய்தியையும் அடுத்தே இவர்கள் யாழ்ப்பாணம் வந்ததாக தெரியவருகிறது. இவர்கள் இலங்கை குடிவரவுச் சட்டத்திற்கமையவே வந்ததாகவும் தெரியவருகிறது. கருணாநிதி இங்கிருக்கும் காலத்

— 8 ஆம் பாக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கில் நியமனம்பெற்ற பட்டதாரி பயிற்சி ஆசிரியர்கள் 2000 ரூபா சம்பளம் பெறுவர்

வடகிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட 300 பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பள இழுபறிநிலைநீக்கப்பட்டுள்ளது.

இவர்களும் மாதாந்த சம்பளமாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என வட கிழக்கு மாகாண கல்வி

— 8 ஆம் பக்கம் பாரக்க

## வட கிழக்கு ஆசிரியர், கல்வி ஊழியருக்கு 50 வீதசம்பள ஊக்குவிப்பு வழங்க பன்னிரண்டரைக் கோடி தேவை

வடக்கு கிழக்கு கல்வித் திணைக்கள ஊழியர், ஆசிரியர்களுக்கான 50 வீத ஊக்குவிப்புப் பணத்தை வழங்குவதற்கு பன்னிரண்டரைக்கோடி ரூபா தேவை என கல்வியமைச்சின் செயலாளர் எஸ். சற்குண

— 8 ஆம் பக்கம் பார்க்க

## வானொலி கலைஞர் சன்மானம் 50 வீதத்தால் அதிகரிப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலைஞர்களுக்கான சன்மானம் இம்மாதம் முதல் ஐம்பது வீதத்தால் அதிகரிக்கப்படும் என தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. வீ. ஏ. திருஞான சுந்தரம் தெரிவித்துள்ளார்.

ஒலிபரபபுக் கூட்டுத்தாபனத்தின் ஆர்வத்தை வளர்த்து ஊக்குவிப்பதற்காகவே சன்மானத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் யாழ்நகரில் நேற்று தங்கியிருந்த போது எடுக்கப்பட்ட படம்

## 2000 ரூபா நிவாரணம் மறுக்கப்பட்ட யாழ் மாவட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் இது வரை மீளக் குடியமர்த்தலுக்கான நிவாரணம் வழங்கப்படாத 32 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இந் நிவாரணக் கொடுப்பனவு 150 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 32 ஆயிரம் குடும்பங்கள் பிந்திப்பதிந்த காரணத்தினாலும் சரியான தகவல் கொடுக்காத காரணத்தினாலுமே இந்த நிவாரணம் வழங்கப்படவில்லை,

புனர்வாழ்வு அமைச்சுடன் இது தொடர்பாக பேச்சு தற்போது இடம்பெற்றுவருகிறது வெகு விரைவில் இப்பேச்சுக்களின் முடிவு வெளிவருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (03)

## A/L 90
## DAY CLASS

திங்கள் — வெள்ளி பி. ப. 2-30

★ CHEMISTRY-INORGANIC ★

திரு. மகேஸ்வரன் — ஆரம்பம்: 02.04 90

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

04007



## O/L DEC. 90

வகுப்புகளுடன் இர்முறை

**9-ம், 10-ம் ஆண்டுகளுக்கான புதிய வகுப்புகள்**

ஆரம்பம்: 10 - 04 - 1990

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, : யாழ்ப்பாணம்.

04008


## சிறு விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாண உயர் வேளாலகுல மலேசியாவில் சொந்ததொழில் செய்யும் 1959 இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய், புதன், வெள்ளி இருக்கும் இளைஞருக்கு பொருத்தமான மணமகளைத் தேடுகிறுர்கள் பெண் அழகாகவும் ஆங்கில அறிவுள்ளவராகவும், இருப்பதுவிரும்பத்தக்கது. பொருந்தும் பட்சத்தில் இங்கு வந்து பெண் அழைத்துச் செல்லப்படுவார். மாப்பிள்ளை சொந்த வீடு, கார் வசதிகள் உடையவர். சீதனம் கட்டாயமல்ல. மாதகல் கிராம சங்கத்திற்கு அருகில் வசிப்பவரும். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தருமான திரு. ஆறுமுகதாஸ் அவர்களுடன் நேரில் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெறலாம் 04013

உயழ் உடைகட பூததுல நல்லதேர்ச்சியுள்ள பெண்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் காலை. 8.30—4 30 இற்குள் நேரில் வரவும் BOND BOOK STALL 58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் 04015

வடக்கு கிழக்கு பகுதி

## பாடசாலைகள் அபிவிருத்திக்கு மத்திய அரசு நிதி உதவி

1990 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதிக்கு 5 கோடி 5 லட்சம் ரூபாவை மத்திய அரசு வடக்கு-கிழக்குமாகாண, பாடசாலைகளின் கட்டட புனரமைப்பு தளபாடங்கள் ஆகிய வற்றிற்கு வழங்கியுள்ளது.

அதன் விபரம்பின்வருமாறு: யாழ்ப்பாணம்—1 கோடி 75 இலட்சம்ரூபா, மட்டக்களப்பு 1 கோடி 43 இலட்சம் ரூபா திருகோணமலை 85 இலட்சம், அம்பாறை 40 இலட்சம் வவுனியா30 இலட்சம், கிளிநொச்சி 32 இலட்சம் மன்னர் 25 இலட்சம், முல்லைத்தீவு 20 இலட்சம்

இந்த நிதி உதவி ஆசிய அபிவிருத்தி வங்கி நொராட், கனேடிய அரசு ஆகியவை நன்கொடையாகவழங்கியதாகும்.

## இலுப்படிச்சேனை தொழிச்சாலை மீளத்திறக்குமாறு கோரிக்கை

இலுப்படிச்சேனை ஓட்டுத் தொழிற்சாலையை கூடியவிரைவில் புனரமைப்புச்செய்யுமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சைக் கேட்டுள்ளார்.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பாரிய அடிப்படையில் வீடுகட்டுவதற்கு ஏராளமான ஓடுகள் தேவைப்படுகின்றன. இத்தொழிற்சாலை இயங்காததினுல் வெளியிடங்களிலிருந்து பெருந்தொகையான பணச்செலவில் ஓடுகளைத் தருவிக்க வேண்டியுள்ளது. இதனுல் குறைந்த செலவில் வீடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் அசமந்த போக்கே மேற்படிஓட்டுத் தொழிற்சாலை திருத்தப்பாடாமைக்குக் காரணம்எனக் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (05)

யாழ் மாநகரசபை எல்லைக்குள்

## சோதிக்கப்படாதமிருகங்கள் இறைச்சிக்காகவெட்டத்தடை

ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து இறைச்சிக்காக வெட்டப்படும் சகல மிருகங்களும் யாழ் மாநகர சுகாதார சேவைப் பகுதியினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின்னரே இறைச்சி விற்பனைக்காக அனுமதிக்கப்படும்.

யாழ் மாநகரசபை அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

மேலும் இவ்வாறு இறைச்சிக்காக மிருகங்களைக் கண்ட கண்ட இடத்தில் வெட்டுவது தடை செய்யப்படுவதுடன் மிருகங்களை வெட்டும் இடமான கொல்களத்திலேயே மிருகங்களை வெட்டுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (06)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு

## நிதி வழங்கப்படாததால் கட்டட வேலைகள் ஸ்தம்பிதம்

யாழ் மாவட்ட பாடசாலை அபிவிருத்திக்கான நிதி ஒழுங்காக வந்து சேராத காரணத்தினுல் பாடசாலைக் கட்டட வேலைகள் ஸ்தம்பித நிலைய டைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி கொஞ்சம் கொஞ்சமாக வழங்கப்பட்டு வருகின்றது இதனுல் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்கமுடியாதுள்ளதாகவும், கட்டடங்களுக்கு தேவையான பொருட்கள் பெற முடியாதுள்ளதாகவும் தெரியவருகின்றது. (03)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர வேங்கை 2-ம் லெப்டினன்ட் (சின்னச்சுதா)

### கதிர்காமநாதன் சுதாகரன்

ஈன்றுள் மடியில் 04 - 03 - 1970

ஈழத்தாய் மடியில் 12 - 04 - 1989

ஆண்டுத் திதி: 01 - 04 - 1990

வீரத்தாய் பெற்றெடுத்த வீரமகனே சுதாகரனே — சின்னச்சுதாவே
சின்ன வயதினிலே நீ பள்ளிப் படிப்பை முடித்து விட்டு
அண்ணன் பிரபாகரன் தலைமையிலே வளர்ந்து வந்த
இயக்கத்திலே — பங்காளியானுய்
ஆயுதப் பயிற்சியை முடித்து பல போர்க்களம் சென்றுய்
நீ சென்ற இடமெல்லாம் உன் வெற்றித்திருவடிகள் — பதித்தாய்
அந்நியர் நடத்திய ஆதிக்கத்தில் அவர்களை புறமுதுகு காட்டி ஓடும்படி விரட்டினுய்
இப்படி வெற்றி படைத்த உன்னை தமிழீழ மக்கள்
சின்னச்சுதா என்று அன்புடன் அழைத்தார்கள்
தமிழீழ மக்கள் உன்னை புகழ்ந்தபோது அதைப்பொறுக்காத
கொடிய அரக்சர் கூட்டம் உன்னை அழித்தது
தமிழன்னை செங்கமல தாள்களுக்கு அர்ப்பணமாய்
நின்னரிய தோழனுடன் விண்ணுலக வாசலிலே
கண்ணிமையாவாழ் வெய்தி பார்த்திருக்கும் மண் மைந்தா
நீ சென்ற பாதையிலே தொடர்ந்திடுவோம் எமது பணி
தமிழீழ எல்லை எங்கும் நாட்டிடுவோம் நமது கொடி
ஈழவர் அந்நியர்க்கு அடிமையில்லை இது உறுதி
உமது ஆத்மா சாந்தி பெறப்பிரார்த்திக்கின்ருேம்.

உனை எண்ணி வாடும் அன்புள்ள இதயங்கள்

தாய், தந்தை, அண்ணன்மார், அண்ணி, பெருமகள்
உற்ருர், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்.

உற்ருர் உறவினர் நண்பர்கள் அனைவரும் அன்னுரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்ருேம்.

04005


## "M" Three Travel

வழங்குர் உடனடிப் பிரயாணம்

சவூதி அரேபியா, (Saudi Arabia)

அரபு நாடுகளில் வேலை செய்தவர்களுக்கு மட்டும்

| | |
|---|---|
| Trailer Driver (கனரக வாகன சாரதி) | 800 S. R |
| Hospital Cleaners (வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்) (பெண்களுக்கு மட்டும்) | 475 S. R |

PASSPORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்துகொடுக்கப்படும்.

★ நம்பிக்கை ★ நாணயம்

என்பனவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய தாபனம்

## "M" THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
"இந்திர பவனம்"
சோதி வீதி
காங்கேசன்துறை

கிளை அலுவலகம்:
இல 1, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

04004

# இதயநாதம்

ஞாயிற்றுக்கிழமை 01-04-1990

## நல்வாக்கு

என்னுடைய மனம் பரிசுத்தமாய் இருப்பதால் நான் பத்து மனிதர்களின் பலத்தை உடையவனாக இருக்கிறேன்.

-டென்னிஸன்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## ஜனாதிபதியின் புயல்வேகம்

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்கள் அமைச்சரவையை மறுசீரமைத்துப் புதிய அமைச்சரவை பற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கு முன்பதாக இந்த அமைச்சரவையின் முன்னைய செயற்பாடுகள் பற்றி அவர் நன்கு ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த காலத்தில் இடம்பெற்ற நாசகார நடவடிக்கைகள் காரணமாகச் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டது மட்டுமன்றி சேவைகளும் சீர்குலைக்கப்பட்டிருந்தன.

சேதத்திற்குள்ளான திட்டங்கள் மீளவும் புனரமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதால் அதிக வலுவும், நேரமும் அதில் செலவழிக்கப்பட்டிருந்தன.

இதனால் குறித்த இலக்கை அமைச்சுக்கள் அடையமுடியவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே, பாரிய மாற்றமின்றிப் புதிய அமைச்சரவை நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த அமைச்சு சகல துறைகளிலும் உற்பத்திப் பெருக்கம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு ஆகிய நோக்கங்களில் முக்கிய கவனம் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களைத் தாமதமின்றி நிறைவேற்றும் நோக்குடன் திட்ட அமைச்சு முறை ஒன்றும் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி அதிமுன்னுரிமை அளிக்கப்படவேண்டிய விடயங்களைக் கண்டறிந்து ஆவன செய்வதில் திட்ட அமைச்சர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அவர்கள் அப்பணியை நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் ஜனாதிபதிச் செயலகம் ஆரம்பிக்கப்பட்டுக் குறுகிய காலத்துள் மாதக் கணக்காக, ஏன் வருடக்கணக்காகக்கூட நிறைவேற்றப்படாமல் தேங்கிக் கிடந்த பல விடயங்கள் மிகக் குறுகிய காலத்துள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புத்தளத்தில் இந்த நடமாடும் ஜனாதிபதிச் செயலகம் ஒன்றரை நிமிடத்தில் ஒரு பாஸ்போட் வழங்கிச் சாதனையை ஏற்படுத்தியுள்ளது அன்று சமர்ப்பிக்கப்பட்ட 1312 பிரச்சினைகளில் 414 பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டது.

இவ்வாறு ஜனாதிபதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், நாட்டை அபிவிருத்தி செய்வது, பொருளாதாரத்தை மேம்படுத்துவது, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது என்பன போன்ற விடயங்களிலும் நாட்டை வன்முறையிலிருந்து காப்பாற்றி அமைதி வழி நோக்கி இட்டுச் செல்வதிலும் மிகவும் முனைப்புடனும், புயல் வேகத்திலும் செயற்பட்டு வருகிறார்.

எனினும் இவை மட்டும் நாட்டை மீளவும் சுமுக நிலைக்கு மீளக் கொணராது. நாட்டின் ஏனைய சிறுபான்மை இனங்களின் உரிமைகள் வழங்கப்படுவதோடு, இளைஞர்களின் அமைதியின்மைக்குக் காரணியான அடிப்படைகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை தூக்கி எறியப்பட வேண்டும்.

ஜனாதிபதி இவ்விடயத்தில் நியாயாதிக்க முறையில் செயற்படவேண்டும் எனச் சுட்டிக் காட்டுகிறோம்.

தலைநகரில் பிச்சைக்காரருடன் ஒரு விசிட் (2)

### 12 வயதுடைய நிசாத் என்னும் சிறுவன் சொல்கிறார்:

# பிச்சை எடுத்துவாழ்வதை விட போதைவஸ்து விற்பனை இலாபமானது; ஆனால் அபாயமானது

கொழும்பு நகரில் ஒவ்வொரு பகுதிக்கும் மோசடிக் கூட்டத் தலைவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தெரியாமல் எந்தக் குற்றச் செயலும் நடைபெறாது ஒரு இடத்தில் ஏதாவது அசம்பாவிதங்கள் அல்லது கொள்ளைச் சம்பவங்கள் நடந்தால் அந்தப் பகுதி மோசடிக் கூட்டத்தலைவர்களை பொலிசார் கைதுசெய்து விசாரிப்பது வழக்கம். அந்த அளவுக்கு ஒவ்வொரு பகுதி மோசடித் தலைவர்களும் செல்வாக்குப் பெற்றவர்களாகவே இருக்கின்றனர்.

கடந்த ஒரு மாத காலமாக நாம் அவதானித்ததில் இருந்து

**உதரன்**

சில முக்கிய தகவல்களைப் பெற்றோம். தலை நகரில் உள்ள மோசடிக்கும்பல்கள் போதைப்பொருள் விற்பனை, கொள்ளை, வழிப்பறி. ஆட்களை வைத்து அடித்தல், பிச்சை எடுக்க ஆட்களை ஒழுங்கு செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நகரில் நிசாத் என்ற பன்னிரண்டு வயதுச் சிறுவனைச் சந்தித்தோம், அவன் போதைவஸ்து விற்பனை செய்து கொண்டிருந்தான். அவனைச் சுற்றி நாலு ஐந்து இளைஞர்கள் ஏதோ உரையாடிக் கொண்டிருந்தனர்.

இவர்களின் உரையாடல் முடிந்ததும் நாமும் அந்தச் சிறுவனை அணுகி எமக்கும் போதைவஸ்து வேண்டும் என்றோம். அவன் எம்மை அடையாளம் கண்டு கொண்டானோ தெரியாது.

ஐயா உங்களைப் பார்த்தால் போதைவஸ்து பாவிக்கிற ஆள்மாதிரி இல்லை ... என்ர வழமையான வாடிக்கையாளருக்கு காணக்கூடியதாகத்தான் இருக்கிறது. வழமையா பாவிக்கிறவனுக்கு குடுக்காட்டா அவன் என்ன செய்வானோ தெரியாது. இதைப் பாவிக்கிற ஆக்கள் இது இல்லாம இருக்க மாட்டினம்....

ஐயா நீங்கள் ஏன் இதைப் பாவிச்சு கெட்டுப்போறியள்... இத பாவிச்சா—தொடர்ந்து பாவிக்கவேணும். நான் என்ர குடும்ப கஷ்ரத்தால இதை வாங்கி விற்கிறன்... விற்றுக் கொடுத்தா ஐம்பது ரூபா தருவினம்.. இதில என்ர குடும்பத்த வாழவைக்கிறன்... என்று கூறிக்கொண்டிருந்த வேளையில் ஐயா ... எனக்கு சாமான் தாற முதலாளி வாறார்...என்று கூறியவாறு மெல்ல நழுவினார்.

இவருடைய முதலாளியை ஒரு கணம் நோக்கினேன்...... அவர் நல்ல வாட்ட சாட்டமான மனிதர் ... கையிலே மோதிரம் மின்னுகிறது... கழுத்திலே ஒரு பவுண் சங்கிலி...

அந்தச் சிறுவனிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏதோ சொல்லிவிட்டு விடைபெற்றார். மீண்டும் நாம் அந்தச் சிறுவனை அணுகி விசாரித்த போது... "இவரும் என்னைப்போல போதைவஸ்து விற்றவர்தான் இப்போது இவர் விற்பது இல்லை, என்னைப்போல ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருக்கும் ஆட்களுக்கு சாமான்களைக் கொடுத்துவிட்டு பணத்தைப் பெற்றுச் சென்று பெரிய பொஸ்சிடம் கொடுப்பதுதான் இவருடைய வேலை என்றான்.

இந்தச் சிறுவன் தந்த தகவலைத் தொடர்ந்து கொழும்பின் சேரிப்பகுதி ஒன்றில் நுழைந்து எமக்குத் தெரிந்த சிலர் மூலமாக விபரங்களைப் பெற்றோம், சிறுவர்கள், இளம் பெண்கள், வயது முதிந்தவர்கள் இப்படிப் பலதரப்பட்டவர்கள் இந்த விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போதைவஸ்து பாவனையில் இளம் சமுதாயமே சீரழிந்து கொண்டிருக்கின்றது. 16 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இதற்கு அடிமையாகி இருப்பதனைக் காணமுடிகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முதல் கொழும்பு நகரில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒருவரை மீண்டும் நாம் சந்தித்தபோது ஆச்சரியமாக இருந்தது. மடிப்புக் குலையாத சேட், புதிய சாரம் அணிந்திருந்தார்.

என்ன இவ்வளவு திடீரென வசதியுள்ளவனாக மாறிவிட்டான் என நாம் இவருடன் நெருக்கமாக இருந்த பிச்சைக்காரர்களைக் கேட்டபோது 'இவர் பிச்சை எடுக்கும் தொழிலை விட்டுவிட்டு மோசடிக் கும்பலுடன் சேர்ந்து போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்டார். இப்போது வசதியுள்ளவனாக மாறிவிட்டார்' என்றார்.

கொழும்பில் மிகப் பழைய பிச்சைக்காரனான பழனி கருத்து வெளியிடுகையில்:- இப்போது இருக்கிற திடீர்ப் பணக்காரர்கள் எல்லோரும் குறுக்குவழியில் பணத்தைச் சம்பாதித்தவர்கள்தான். அதுவும் போதைவஸ்து வியாபாரத்தின் மூலமே பணக்காரராகி விட்டனர். எங்களுக்குக் குறுக்குவழி தெரியாது அதனால நாங்க இப்படியே இருக்குறமுங்க என்றார்.

தலை நகரில் பலவிதமான மோசடிப் பேர்வழிகள் நடமாடுகிறார்கள். பிச்சைக்காரர்கள் போன்று பகலில் நோட்டம் விடுவார்கள். இரவில் களவுக்குச் சென்றுவிடுவார்கள். வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உதவுவதுபோன்று நடிப்பார்கள். நோயாளர்களின் நிலையைப் பொறுத்துத் தமது கைவரிசையைக் காட்டி விடுவார்கள்.

இப்போது போலிப் பிச்சைக்காரர்களின் நடமாட்டம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் புகையிரதத்திலும், கோட்டை புகையிரத நிலையத்திலும் கூடுதலாகக் காணப்படுகின்றது.

இரவுத் தபால் புகையிரதத்தில் பிச்சைக்காரர்கள் போன்று பிச்சை கேட்ட ஒருவர் ஒரு பெண்ணின் சங்கிலியை அறுத்துக்கொண்டு மறைந்துவிட்ட சம்பவம் கடந்தவாரம் நிகழ்ந்தது.

கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு நோயாளர் ஒருவரை அவசர அவசரமாகக் கொண்டு வந்தார்கள் இவருக்கு உதவி செய்வது போன்று நடித்து அந்த நோயாளரிடம் இருந்த பணத்தை அபகரித்துச் சென்றுவிட்ட சம்பவமும் இடம் பெற்றிருக்கின்றது.

எனவே பிச்சை எடுக்கவரும் எல்லோரையும் பிச்சைக்காரர்கள் என்று நினைத்து விடாதீர்கள். பிச்சைக்காரர்கள் என்ற போர்வையில் நாடகமாடும் மோசடிக்கும்பல்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

இப்போது தலைநகரில் தினம் தினம் வழிப்பறிச் சம்பவங்கள் இடம் பெறுகின்றது. இரவுப் புகையிரதத்தில் பயணம் செய்து காலைவேளை கொழும்பு நகரை அடைவோர் இந்த வழிப்பறிக் கோஷ்டியிடம் சிக்கித் தமது உடமைகளை பறிகொடுத்து வருகின்றார்கள். வழிப்பறிக்காரன் யார் என்பது எவருக்கும் தெரியாது. பிச்சை எடுப்பவர்கள் போன்று இருப்பவர்களும், நவீன உடைகளில் நடமாடுபவர்களும் இந்த மோசடிக் கும்பல்களில் அடங்குகின்றனர்.

சில தினங்களுக்கு முதல் ரயில் நிலையத்தில் ஒருவரைச் சந்திப்பதற்காக அதிகாலை வேளை கொழும்பு இரண்டாம் குறுக்குத் தெருவால் நடந்து கொண்டிருந்தோம். ஒரு இடத்தில்

—7ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு றவுண்ட் அப்

## "போலி" பிச்சைக்காரர்கள்

தலைநகரில் போலிப்பிச்சைக்காரர் நடமாடுகிறார்கள். இவர்கள் மோசடிக் கும்பல்களாலே நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் சன நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் தான் நடமாடுகிறார்கள். இவர்களைப் பார்த்தால் போலி யார்? உண்மையான பிச்சைக்காரர்கள் யார்? என்று தெரிந்து கொள்ள முடியாது. கிராமப்புறங்களில் வறுமையில் வாடுவோரை அழைத்து வந்தே பிச்சை எடுக்கவைக்கிறார்கள்.

## வாடிக்கையாளருக்கு முதலிடம்

தலைநகரில் சிறுவர்கள் போதைவஸ்து விற்பனை செய்கிறார்கள். தமது வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்த பின்னர் தான் புதிய வாடிக்கையாளருக்கு போதை வஸ்துக்களை விற்பனை செய்கிறார்கள். வாடிக்கையாளர்களில் எவ்வளவு கவனம் பார்த்தீர்களா?

# கிழக்குச் செய்திகள்

## திருமலை கலை இலக்கியவட்டம்

திருகோணமலை மாவட்டத்தின் கலை,இலக்கியக் கலா சாரங்களைத் திரட்டும் முகமாகவும் அதனை நிறுவன முறையில் பேணிவளர்க்கும் நோக்குடனும், திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்களையும்,கவிஞர்கள், கலைஞர்களையும் இணைத்து திருகோணமலை மாவட்ட கலைஇலக்கிய வட்டமொன்று நிறுவப் படவுள்ளது. வெளியீட்டு வசதியற்றதம்ஆக்கங்களைவைத்திருக்கும் பழம் பெரும் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளியிட ஆவன செய்வதும், இலை மறை காயாக மறைந்திருக்கும் எழுத்தாளர்களை முன்னுக்கு கொண்டு வருவதும் என்பது போனற வேறு பல நோக்கத் திட்டங்களுடன் இந்த அமைப்பைதாங்கள் நிறுவ இருப்பதாக இந்தஅமைப்பின் முன்னோடியான ஆசிரியர் தில்லைக்குமரன் தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு இடைநிறுத்தம்

தேசிய போக்குவரத்துத் தினத்தை முன்னிட்டு வீதிச் சட்டங்கள் தொடர்பாக கிழக்குப் பிராந்தியப்போக்குவரத்துச் சபையின் அனுசரணையுடன் கல்முனை வெஸ்லி மகா வித்தியாலயத்தில் கடந்த 24 ம் திகதி நடைபெற்ற மாணவர் கருத்தரங்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் இடை நிறுத்தப்பட்டது. இது போன்ற கருத்தரங்கு நடைபெறுவதற்கு விடுதலைப் புலிகளிடம் அனுமதி பெறுமையே இந்தஇடை நிறுத்தத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற கருத்துக்களுக்கு பொலிசார் அழைக்கப்படக் கூடாதுஎனவும் இயக்கத்தினர் பணித்துள்ளனர்.

## குடியேற்றம் பற்றிப் பேச்சு

திரு கோணமலை மாவட்டத்தில் உள்ள சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 4 ஆம் திகதி முக்கிய பேச்சு வார்த்தை இடம் பெறவுள்ளதாகத்திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர். திரு. ரூபன் தெரிவித்துள்ளார். அம் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளின் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாகவும் இந்தப்பேச்சுவார்த்தைகளின்போது விரிவாக ஆராயப்படும் என தெரியவந்துள்ளது.

## சேருவலையில் இன ஐக்கியம்

சேருவில பிரதேசத்தில் வாழும் எல்லா இன மக்களும் சுமுகமான சூழ்நிலையில் அமைதியாக வாழ வேண்டும் என்பதை மனதில் கொண்டு, சேருவில உதவி ஆணையாளர் பிரதேசத்தில் சிங்களவர்களும், தமிழர்களும் இன சௌஜன்ய உணர்வுடன் பரஸ்பர உறவு கொண்டு வாழ வழி செய்ய வேண்டும். என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள்முக்கியஸ்தர்களிடம் விடுத்துள்ளாதாக சேருவில உதவி ஆணையாளர் ஏ கல்கொட்டுவ தெரிவித்துள்ளார், இருதரப்பினரும் பல்வேறு விடயங்கள்தொடர்பாக மனம் விட்டுப் பேசினார்கள்.

## கல்முனையில் கடைகள் தீக்கிரை

கடந்த வியாழன் இரவு-கல்முனை பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் நூறுயார் தொலைவிலிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான புடைவைக்கடை ஒன்றும், இரு இரும்புக்கடைகளும் பல சரக்குக்கடைகள் சிலவும் குழுவொன்றினால் தீக்கிரையாக்கப்பட்டன.

## அக்கரைப்பற்றுக்குபுதியபஸ்கள்

புதுவருடத்தினத்திற்கு முன்னதாக கிழக்குப்பிராந்திய போக்குவரத்துச்சபையின் கீழ் இயங்கும் அக்கரைப்பற்று டிப்போவிற்கு புதிய இரண்டு பஸ்வண்டிகள் கிடைக்கவுள்ளன இந்த டிப்போவில் போதிய பஸ்வண்டிகள் இல்லாமையாலும் திருப்தியான சேவையை மேற்கொள்வதில் சிரமங்கள் எதிர் நோக்கப்பட்டு வந்தன.

## புலிகள் அணிவகுப்பு

ஆயுதப்பயிற்சி பெற்ற தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் உறுப்பினர்களான 175 இளைஞாகளும், 40 யுவதிகளும் கொமண்டோ சீருடை அணிந்து, அணிவகுப்பு மரியாதை வைபவம் ஒன்றை அக்கரைப்பற்றில் நடாத்தினர்.

இவ்வைபவத்தைமுன்னிட்டுவீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.இந்தஅணி வகுப்பு ஊர்வலம் தண்டியடியில் ஆரம்பமாகி அக்கரைப்பற்று பிரதான சந்தியில் முடிவடைந்தது. பயிற்சி பெற்ற இவ்வீரர்களும், வீராங்கனைகளும் விடுதலைப்புலிகள் இயக்கஅலுவலபிரமுகர்களால் வரவேற்கப்பட்டனர்.

## மட்டு. அரசஅதிபர்வேண்டுகோள்

இலக்கியக் கூட்டங்களில் இடம்பெறும் உரைகளில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய பல தகவல்கள் இடம்பெறுவதால் இவ் விலக்கிய கூட்டங்களில் ஆசிரியர்களும், உயர்வகுப்பு மாணவர்களும் கலந்து கொள்ள ஆவன செய்யுமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிரதிக்கல்விப் பணிப்பாளரைகேட்டுள்ளார்.

## மீண்டும் கொடுப்பனவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிதியில்லாத காரணத்தினால் இடைநிறுத்தப் செய்யப்பட்டிருந்த புனர்வாழ்வுக் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சிலிருந்து இதற்கான நிதி இப்போது அனுப்பிவைக்கப் பட்டிருப்பதாகச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விளையாட்டுக் களத்தில் . . .

# இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து கபில்தேவ் நீக்கப்படுவாரா?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கிரிக்கெட் சாதனையாளர்களின் வரிசையில் இடம் பெறமாட்டாரா? என்ற ஐயம் இன்றைய கிரிக்கெட் ரசிகர்களிடையே எழுந்துள்ளது அண்மையில் நடந்துமுடிந்த இந்திய அணியின் கிரிக்கெட் போட்டிகளில் கபில்தேவ் தனது திறமையை வெளிப்படுத்தவில்லை என்பது உண்மையே.

சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் இரட்டைச்சாதனை படைத்தவர்களில் ஒருவரான கபில்தேவ் இன்று இந்திய அணியில் இருந்து நீக்கப்படும் அளவிற்கு பின்தங்கிவிட்டார். இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளருக்கு தட்டுப்பாடு உள்ள தாலேயும், சாதனை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதனாலுமே கபில்தேவ் இன்று இந்திய அணியில் அங்கம்வகின்றார்.

பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் சாதனைபடைத்தவர்கள் நால்வர் உள்ளனர். இங்கிலாந்து வீரர் இயன் போதாம் பாகிஸ்தான் வீரர்

**எஸ். ஆர். எம்.**

இம்ரான் கான், நியூசிலாந்து வீரர் றிச்சாட் ஹட்லி, இந்தியா வீரர் கபில்தேவ் மேற்கிந்திய வீரர் மல்கம்மார்ஸல் இவர்களில் இயன்போத்தமே கபில்தேவ்வைவிட கூடுதலான அளவுசாதனை படைத்துள்ளார். கபில்தேவ் தற்போது 500 டெஸ்ட் விக்கெட் வீழ்த்தும் சாதனையையும் 6000 டெஸ்ட் ஓட்டங்கள் பெறும் சாதனையையும் நோக்கி முன்னேறிவருகின்றார்.

கபில்தேவ் 1959-ம் ஆண்டு ஜனவரிமாதம் 6-ம் திகதிபிறந்தார். தற்போது இவருக்கு 31 வயது இன்னும் நான்கு வருடங்களினுள் தனது திறமையை சரியாக வெளிப்படுத்தாதுவிட்டால் சாதனையாளர் வரிசையில் இருந்து விலக்கப்படுவார்.

இவர் ஆகக்கூடுதலாக ஒரு இனிங்லில் பெற்ற விக்கெட் 1983-ம் ஆண்டு மேற்கிந்திய அணிக்கெதிராக பந்து வீசி 83 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெட்டுகளை கைப்பற்றியமையாகும் அப்போட்டியில் 30 3. ஓவர்களுக்கு 83 ஓட்டங்களை கொடுத்து 9 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றினார்.

இவர் ஆகக்கூடுதலான ஒரு டெஸ்டில் விக்கெட்பெற்றமை பாகிஸ்தானுக்கு எதிராக 146 ஓட்டங்களுக்கு 11"விக்கெட்டுகளை பெற்றமையாகும் அதிதுடன் இளம் வயதில் 100 விக்கெட்டுகளையும் 1000 டெஸ்ட் ஓட்டங்களையும் பெற்றசாதனை இவரையே சேரும் அப்போது இவருக்கு வயது 21 வருடங்களாகும்.

இவர் பெற்ற டெஸ்ட் சதங்களின் எண்ணிக்கை 5 ஆகும் ஆகக்கூடுதலாக பெற்ற ஓட்ட எண்ணிக்கை 163 ஆகும். இது இலங்கை அணிகெதிராக இவர் பெற்ற ஓட்டங்களாகும் கபில்தேவ் தலைமையிலே மூன்றுவது உலகக்கிண்ணக் கோப்பை இந்திய அணிக்கு கிடைத்து வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்றாகும் முதன் முதலாக இக்கோப்பையை இந்திய அணிபெற்றது இந்திய கிரிக்கெட் உலகில் முக்கிய திருப்புமுனையாகும். இப்பெருமை கபில்தேவையே சாரும்.

இவர்1000 டெஸ்ட் ஓட்டங்களை 24 டெஸ்ட் போட்டிகளிலும் 2600 டெஸ்ட் ஓட்டங்களை 49 டெஸ்ட் போட்டிகளிலும் 4000 டெஸ்ட் ஓட்டங்களை 96 போட்டிகளிலும் பெற்றார். இவரது சராசரி ஓட்ட எண்ணிக்கை 37. 09 ஆகும்.

கபில்தேவ்இந்திய அணியின் தலைவராக இருந்த போது 34 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி கலந்து கொண்டது' 4 போட்டிகளில் மட்டுமே இந்தியா வென்றுள்ளது இவற்றில் 7 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது கபில்தேவ் தனத தலைமைப் பதவியை சிறப்பாகவே பயன்படுத்தினார் என்பது உண்மை.

தற்போது கபில்தேவினது திறமைகள் வெளிப்படாது உள்ளன. இதனால் ரசிகர்களிடையே பெருமஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இனித்தொடர்ந்து வரும் டெஸ்ட் போட்டிகளில் கபில்தேவ் தனது திறமையை காட்டாது விடின் அணியில் இருந்து இவர் நீக்கப்படுவார் என கிரிக்கெட்ரசிகர்கள் அஞ்சுகின்றார்கள் எனினும் இவர் திறமையாக விளையாடி 6000 டெஸ்ட் ஓட்டங்களையும் 500 டெஸ்ட் விக்கெட்டுகளையும் பெறவேண்டுமென்பது அநேக ரசிகரகளின் எதிர்பார்ப்பாகும்.

## நீர்த்தடாகத்திற்கு மூடுவிழா; காகங்கள் அங்கலாய்ப்பு

முரசொலியில் வெளிவந்த செய்திகளையடுத்து யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கருகில் உள்ள சந்தியில் அமைந்திருந்த 'நீர்த்தாடகம்' தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சந்தியில் நீர்த்தாடகம் போல் அமைந்திருந்த இப்பள்ளத்தினால் போக்கு வரத்துக்குபலஇடைஞ்சல்கள்ஏற்பட்டு வந்தன. இந்தப் பள்ளத்திற்த நீர்த்தாடகம் என்ற பெயர் சூட்டி முரசொலிபல முறைச் செய்தி வெளியிட்டது குறிப்பிடத்தக்கது இந்த தடாகத்திலேயே யாழ் நகர காகங்கள் கூட்டமாக ஸ்நானம் செய்து வந்தன. (03)

## தொலைத் தொடர்புத்திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாறும்

விரைவில் தொலைத் தொடர்புத் திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாற்றப்படவுள்ளது. உத்தேச மாற்றத்தின்பின் தொலைத்தொடர்பு ஊழியர்களின் சம்பளத் தொகையும் நூற்றுக்கு 40 சத வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

சம்பள அதிகரிப்புடன் ஊழியர்களுக்கு புதிய லீவு முறைகள், வைத்திய வசதிகள், சேம நல முறைகள் என்பனவும் அறிமுகப் படுத்தப்படும் என தொலைத் தொடர்புத் திணைக்கள சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அருட்திரு. தோமஸ் முனிவர் புனிதர் பட்டத்திற்கு சிபார்சு

அருட் திரு பீ. ஏ தோமஸ் முனிவரின் புனிதர் பட்ட ஆராய்ச்சிக்காக ரோமாபுரியிலிருந்து அருட்திரு. ஜேம்ஸ் எம். பிற்ஸ்பற்றிக் அடிகள் அண்மையில் தோலகட்டிக்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டு சென்றுள்ளார்.

தோலகட்டி றேசரியன் ஆச்சிரம ஸ்தாபகர் அருட்திரு. தோமஸ் முனிவர் புனிதர் பட்டத்திற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாப்பரசர் இது சம்பந்தமான ஆய்வுகளைச் செய்து வருகின்றார்.

அருட்திரு. தோமஸ் முனிவர் புனிதர் பட்டம்] சூட்டப்பட்டால் முதலாவது உலகத் தமிழ்ப் 'புனித'ராகப் போற்றப்படுவார்.(36)

ஏஜன்ஸி ஏமாற்றியது

## வேலையும் இல்லை, பணமும் இல்லை மலேசியாவில்இலங்கையர்தவிப்பு

மலேசியாவில்வேலைவாய்ப்புகள் பெற்றுத்தருவதாக மோசடி செய்யப்பட்ட பல இளைஞர்கள் தற்போது மலேசியாவில் அநாதரவான நிலையில் உள்ளனர்.

இவர்களில் சிலர் தம் கடவுச் சீட்டு விமான டிக்கட், பணம் என்பவை இல்லாது மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரக வளவில் தங்கியுள்ளனர்

இவ்வாறு பரிதாப நிலையில் உள்ள இளைஞர்களை இலங்கைக்கு மீளக் கொண்டு வருவதற்கு விமான டிக்கட்டுகளை உறவினர்கள் ஏற்பாடு செய்யுமாறு வெளியுறவு அமைச்சு கேட்டுள்ளது.

## 1990வாகன அனுமதிப்பத்திரம் ஏப்பிரல் இறுதிவரை பெறலாம்

யாழ்மாவட்டத்தில் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான இறுதித்திகதி ஏப் பிரல் மாதம் 30 ந்திகதிவரை நீடிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

அரச அறிவித்தலின்படி மார்ச் 31ம் திகதிக்குப்பின்னர் வாகன அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள் 10வீதம்கூடுதலாக பணம் செலுத்தவேண்டும். இதற்கான இறுதித் திகதியே பிற்போடப்பட்டுள்ளது.

அண்மையிலேயே இத் திணைக்களம்இயங்கத்தொடங்கி இருந்தது. இதன்காரணத்தினால் பலர் இன்னமும் வாகன அனுமதிப் பத்திரம் பெறவில்லை. ஏப்பிரல் 30ம் திகதிக்குப்பின்னரே 10 வீதம் கூடுதலாக அறவிடப்படும். (03)

ஊற்றுப்புலத்தில் பேராசிரியர் சிவத்தம்பி பேச்சு:

# பாடசாலைக்கல்வியுடன் பண்பாடு இணைந்து செல்ல வேண்டும்

''உதவி என்பது ஒருவழிப் பாதையல்ல. உங்களுக்கு நீங்கள் உதவத் தயாராயிருந்தால் மட்டுமே மற்றவர்களின் உதவி உங்களுக்குப் பயன்படும்' ஆகையால் உதவிகளால் மட்டும் முன்னேற முடியாது. கிராம முன்னேற்றச் சங்கம், சிக்கனக் கடனுதவிச் சங்கம் போன்றவையூடாக ஒன்றிணைந்து உதவிகளை ஊக்கமுடன் பயன்படுத்தி மக்கள் முன்னேற வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி ஊற்றுப்புலம் கதிரவேலு தமிழ் வித்தியாலயத்தை அரசினர் பொறுப்பேற்கும் வைபவத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி கலந்துகொண்டு பேசும்போது கூறினார். உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. ந. பத்மநாதன் அவர்கள் தலைமையில் திட்டப் பொறுப்பாளர் திரு. நா. வை. குகராசாவின் வரவேற்புரையுடன் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதக்கல்விப் டணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பாடசாலையைத் திறந்துவைத்தார். பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

'பொது நிறுவனங்கள் ஒரு கட்டம் வரையே முன்னேற்றத்திற்கு வழி வகுக்கமுடியும் அரச நிறுவனங்களின் உதவியுடனேயே அவை தொடர்ந்து முன்னேறி நிலைபெறமுடியும் புராதனப் பண்பாடு உடைய பிரதேசமாக இப் பகுதி கருதப்படுகிறது. பாடசாலைக் கல்வியுடன் பண்பாட்டு வளர்ச்சியையும் இணைத்துச் செல்ல வேண்டும். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மாணவர்களுககு சீருடைகள், உபகரணங்கள், தளபாடங்கள் ஆகியவற்றை வழங்கி உதவும் என்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தனது உரையில் குடியேற்றத் திட்டத்திற்கான வீதியின் அவசியம் பற்றி உணர்வதாகவும் இம் மாதம் 31-ஆம் திகதி வருகைதரும் புனர்வாழ்வு அமைச்சருடன் கலந்துமுயற்சி செய்வதாகவும் தெரிவித்தார்

தலா பதினைந்தாயிரம் ரூபா வீதம் நூற்றிஐம்பது வீடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. சு. வேலுப்பிள்ளை அவர்கள், மக்கள் தம் கூட்டு முயற்சியின் மூலம் இதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

1983 வன்செயல்களால் அகதிகளாக வந்த மக்களைக் குடியமர்த்தி வாழ வைத்த அகதிகள் புனர்வாழ்வுக் சழக முன்னாள் தலைவர் அமரர் விசுவலிங்கம் குருகுலம் அப் புஜி அமரர் கதிரவேலு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஜெயக்கொடி ஆகியோர் நினைவு கூரப்பட்டனர். குடியேற்ற திட்டம் வலுப்பெற உதவிய போராளிகளின் தியாகத்தைப் பலரும் பாராட்டிப் பேசியதோடு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக்கொடி பேராசிரியர் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

மேற்படி வைபவத்தில் மேலதிக அரசாங்க அதிபர்கள் திருவாளர்கள் க. குணராசா க. துரைராசா, கிராமசேவை அலுவலர்கள் திருவாளர்கள் யோகேந்திரன், தனபாலசிங்கம் பாடசாலை அதிபர் திரு. சோ. குலசிங்கம், பிரதிக் கொத்தணி அதிபர் திரு. க. நாகலிங்கம் திருவாளர்கள் சி. கந்தசாமி, ந. சின்னையா ஆகியோர் உரையாற்றினர். ஸ்கந்தபுரம் பிரதிக்கொத்தணி அதிபர் திரு. கனகசபாரத்தினம் தனது ஒரு மாதச் சம்பளத்தை பாடசாலையின் தளபாடங்களுக்காக வழங்கினார்; பாதிக்கப் பட்டோருக்கான உடுபுடவைகளும் வழங்கப்பட்டன. (4)

## வானொலியில் இன்று

01. 04. 90 ஞாயிறு

காலை

5.05 தோத்திரமாலை- பத்மநாப சுப்ரபாதம்
5.30 பாமாலை- சருமாரியம்மன் திருவிருத்தம்
8.00 கிறிஸ்தவகீதங்கள்
8.15 மெல்லிசைப் பாடல்கள்- ராணி ஜோசப்
8.30 சுவாரா மலாயூ மலாய்மஞ்சரி

பகல்

10.00 கல்விச்சேவையின் ஆங்கிலப்பாடம்
10.30 வீடே நாடகம்- கே. எஸ். பாலச் சந்திரன்
10.45 பூவையர் பூங்கா- நடத்துபவர்: சற்சொரூபவதி நாதன்
11.15 சிறுவர் மலர்- நடத்துபவர்: வானொலி மாமா
11.45 நேயர் கடிதம்

மாலை

6.15 இப்தார் விசேட முஸ்லிம் நிகழ்ச்சி
6.30 ஞ ஞமிர்தம்
6.45 கிறிஸ்தவ கீதங்கள்

இரவு

8 00 கத்தோலிக்க நிகழ்ச்சி- புதியஉலகம்- மலர்வேந்தன்
8.30 கிறிஸ்தவப் பாடல்கள்
8.45 ராக ரசம்- நடத்துபவர்: எஸ். கே பரராஜசிங்கம்
9.20 பக்திப்பாடல்கள்
9 30 கவிதைச்சித்திரம்- எப்படிப் பாடினரோ- சில்லையூர் செல்வ ராஜன்
9.45 இசைக்கச்சேரி- எம். பி. பாலசுப்பிர மணியம்
10.45 நினைவில் நிறைந்தவை

## 50 இலட்சம் டாலர் ஒதுக்கீடு அமைச்சர் ரஞ்சன் தகவல்

கிழக்குப் பிரதேசங்களில்ப் கடற்றொழில் மற்றும் விவசாயத்துறையை முன்னேற்றுவதற்கு பலவற்றைச் செய்ய முடியும், சேதமடைந்த சகல தொழிற்சாலைகளையும் பழுதுபார்த்து அவற்றின் உற்பத்தி நடவடிக்கைகளை வழமையான மட்டத்திற்கு கொண்டுவர முடியும்.

மேற்கண்டவாறு வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு ராசாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்தின கொழும்பு காபேஸ் ஹோட்டலில் நடைபெற்ற வெளிநாட்டு நிருபர்கள் சங்க கலந்துரையாடலில் வடக்கு, கிழக்கின் எதிர் காலம் பற்றிக் எடுத்துக் கூறுகையில் குறிப்பிட்டார்.

''இதற்கென ஐம்பது இலட்சம் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன'' என்றுக் தகவல் வெளியிட்டார்.

## வினைத்திறமைகாண் பரீட்சை ஏப்ரல்19-இல் ஆரம்பமாகும்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப் பெறுகின்ற, இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பிற உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும், இரண்டாம் மொழிப் பரீட்சையும் 19-4-90 அன்று ஆரம்பமாகும்.

பரீட்சார்த்திகளுக்குரிய பிரவேச அட்டவணைகளும், நேர அட்டவணைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் ஆதரி வெதமுல்ல அறிவித்துள்ளார்.

மேற்படி இப்பரீட்சைகள் 2-4-90-இல் ஆரம்பமாகவிருந்து பிற்போடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## 625 இந்து ஆலயங்கள் வன் செயலினால சேதம்

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 625 இற்கும் அதிகமான இந்துக் கோவில்கள் சேதமுற்றுள்ளன என்ற புள்ளி விபரத்தை இந்து கலாசார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி யாழ் மாவட்டத்தில் 265, மட்டக்களப்பு மாவட்டத்தில் 123, அம்பாறை மாவட்டத்தில் 69, மன்னார் மாவட்டத்தில் 35, திருகோணமலை மாவட்டத்தில் 63, முல்லைத்தீவு மாவட்டத்தில் 29, வவுனியா மாவட்டத்தில் 21, கிளிநொச்சி மாவட்டத்தில் 17 கோயில்கள் சேதமுற்றுள்ளதாக மேற்படி புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணிகள் இல்லாதோருக்கு காணிகள் வழங்க நடவடிக்கை

ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கையின் கீழ் யாழ். மாவட்டத்தில் காணியற்றவர்களுக்கு காணிகள் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தற்போது மருதங்கேணி, பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் காணி வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனசவிய, உணவுமுத்திரை பெறுபவர்களுக்கு இக்காணி வழங்கும் திடடத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. வருமானம் குறைந்தவர்களுக்கும், காணிகள் அற்றவர்களுக்குமே இக் காணிகள் வழங்கப் படவுள்ளன. (03)

## விளையாட்டுச் செய்திகள்

### மாவிட்டபுரத்தில் போட்டி

புதுவருடத்தை முன்னிட்டு மாவிட்டபுரம், மாவை. தெற்கு கிராமசேவை அலுவலகர் பிரிவுக்கான விளையாட்டுப்போட்டி ஒன்றுமாவிட்டபுரம் கீரிமலை வீதியில் அமைந்திருக்கும் சீமெந்து தொழிற்சாலை நிலத்தில் அமைக்கப்பட்ட மைதானத்தில் ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. துவிச்சக்கரவண்டி 10 மைல் (ஆண்கள்) துவிச்சக்கரவண்டி 5 மைல் (பெண்கள்) மருதன் ஒட்டப் போட்டி 5 மைல் (ஆண்கள்) தாச்சிப்போட்டி, 100 மீற்றர் ஓட்டம் (ஆண்கள்) 100 மீற்றர் ஓட்டம் (பெண்கள்) கயிறு இழுவை (ஆண்கள்) சிறுவர்களுக்கான சங்கீதக் கதிரை (பத்து வயதிற் குட்பட்டவர்கள்) சிறுவர்களுக்கான மூன்று சில்லு சயிக்கில் ஓட்டம் (ஆறுவதிற்குட்பட்டவர்கள்) குண்டெறிதல் (ஆண்கள்) விநோத உடைப் போட்டி, தடை ஓட்டம் (பத்து வயதிற்குட்பட்ட ஆண்கள்) தடை ஓட்டம் (பெண்கள்) முதியோர் ஓட்டம் (60 வயதிற்கு மேற்பட்டோர்) ஆகிய போட்டிகள் இதில் இடம்பெறும்.

### சென். அந்தனிஸ் தகுதி

71-வது தேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, அரியாலையில் நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக கடந்த 30 ம் திகதி அரியாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 7 வீரர்கள் பங்குபற்றும் அரைஇறுதி உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலை ஜனசமூக நிலைய அணியை பாஷையூர் சென் அந்தனிஸ் ஐக்கிய சச சமூக நிலைய அணி 2:5 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது ஆட்டம் ஆரம்பமானவுடனேயே சென் அந்தனிஸ் தனது முதல் கோலைப் போட்டதினால் சிறிது பதட்ட நிலைக்கு தள்ளப்பட்ட அரியாலை அணி சில நிமிடங்களின்பின் புத்துயிர் பெற்று ஆடினாலும் 2 கோல்களை மாத்திரமே போடமுடிந்தது. அதேசமயம் சென் அந்தனிஸ் மேலும் 4 கோல்களை போட்டு தமது வெற்றியை நிட்சயப்படுத்திக் கொண்டது. இப்போட்டியில், அல்பிரட் ரட்ணராஜா, றவிக்குமார் ஆகிய இரு வீரர்களும் சிறப்பாக ஆடினார்கள். நடுவராக திரு எம். ரே. விமலதாசன் கடமையாற்றினார். (16)

### சாரணர் சமாதான பவனி

கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கமும் பளை மகாவித்யாலய சாரணர் சங்கமும் 10 வருடப்பூர்த்தி விழாவினை ஒட்டி சமாதான செய்தி தாங்கிய. சமாதான சைக்கிள் ஓட்டத்தினை ஒன்பதாம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர். இவர்கள் எடுத்து செல்லும் சமாதான செய்தி ஜனாதிபதி பிரேமதாஸவிடம் புதுவருடத்தினத்தன்று ஒப்படைக்கப்படும் ஒன்பதாம் திகதி காலை 6 30 மணிக்கு பளை மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகும். இச்சமாதான ஊர்வலம் ஆனையிறவு, கிளிநொச்சி, மாங்குளம், புளியங்குளம் வழியாக இரவு வவுனியாவை அடையும் 10-ம் திகதி காலை 6 30க்கு வவுனியாவில் இருந்து புறப்படும் இவ்வூர்வலம் மதவாச்சி, நொச்சியாமை வழியாக இரவு புத்தளத்தை அடையும் 11-ம் திகதி காலை 6.30 க்கு புத்தளத்தை விட்டு புறப்படும் சமாதான ஊர்வலம் சிலாபம்-வெண்ணப்புவ வழியாக இரவு நீர்கொழும்பை சென்றடையும். 12-ம் திகதி காலை 6.30 க்கு நீர்கொழும்பை விட்டு புறப்படும் இவ்வூர்வலம் கட்டுநாயக்கா, ஜாஎல வழியாக கொழும்பை அடைந்து, தேசிய சாரணர் தலைமை அலுவலகத்தில் இரவுப்பொழுதைக் கழிக்கும். 13-ம் திகதி காலை, தமிழ் பத்திரிகை காரியாலயங்களுக்கும் ரூபவாஹினி- இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஆகிய இடங்களுக்கும் சென்று சமாதான செய்திகளை சேகரிக்கவிருக்கும் இந்த சமாதான ஊர்வலம் அன்று மதியம் 12 மணியளவில் முக்கிய தலைமை அதிகாரிகளையும் பிரதிநிதிகளையும் சந்திக்கவிருக்கின்றது. ஒவ்வொரு இடங்களைச் சேர்ந்த மாவட்ட அதிகாரிகளும், உதவி அரசாங்க அதிபர்களும், கல்வி அதிகாரிகளும் இவர்களை வழி அனுப்பி வைப்பார்கள்.

### புத்தாண்டு விளையாட்டு விழா

(விளையாட்டுத்துறை நிருபர்)

தேசிய புத்தாண்டு விழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் இடம்பெற உள்ள மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண், பெண்) என்பன செல்ல வேண்டிய பாதைகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன மரதன் ஓட்டப் போட்டி- சென்சாள்ஸ் பாடசாலைக்கு அண்மையில் ஆரம்பமாகி, பிரதான வீதி 4ஆம் குறுக்குத்தெரு (இடது பக்கம் திரும்பி) பீச் ரோட் (இடது பக்கம் திரும்பி) சென் அந்தனிஸ் புங்கன் குளம் வீதி (இடதுபக்கம் திரும்பி) கண்டி வீதி வழியாக ஆரம்பமான இடத்தில் முடிவடையும். பெண்கள் சையிக்கிள் ஓட்டப் போட்டி- ஆண்கள் மரதன் ஓட்டப் போட்டிக்கு குறிப்பிட்டுள்ள அதே பாதையில் இரு தடவைகள் செல்ல வேண்டும். ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி சென் சாள்ஸ் பாடசாலைக்கு அண்மையில் ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாக கே, கே. எஸ் வீதி, மருதனாமடச் சந்தி, கோப்பாய்ச் சந்தி, கைதடிச் சந்தி, கண்டி வீதி வழியாக ஆரம்பமான இடத்தில் முடிவடையும், ஆண் பெண் இருபாலாரும் (STANDARD) 'ஸ்ராண்டட்' சைக்கிளையே பாவிக்க வேண்டும் என்று போட்டிக் குழு விரும்புகிறது; ஆனால் பெண்களைப் பொறுத்தளவில் அவர்கள் [LADYBICYCLE] லேடிஸ் சையிக்கிள் பாவிப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால் இருபாலாரும் எக்காரணத்தை முன்னிட்டும் (RACING CYCLE) 'றேசிங் சயிக்கிள்' பாவிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது, அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 11 பேர் பங்கு பற்றும் கயிறு இழுத்தல் போட்டியும் நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ள போட்டிக் குழு இணக்கம் தெரிவித்துள்ளது யாழ் பொலிஸ் பிரிவின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் குழுக்கள், 13 வீரர்களின் பெயர்ப் பட்டியல் உடன் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்பதாக யாழ் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றனர். இவ் விழாவின் சிறப்பு அம்சமான 7 வீரர்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெறுபவர்கட்கு மதிப்பு மிக்க பரிசில்களை முரசொலி ஸ்தாபனம் வழங்கவுள்ளது, (16)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# யாழ். மாவட்டத்திற்கு மட்டும் ஏன் இந்தப் பாகுபாடு?

ஆசிரியர்
முரசொலி

27-11-87-ல் வர்த்தமானி அறிவித்தலின்படி நாட்டின் சகல மாவட்டங்களிலும் உள்ள கிராம சேவகர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. ஆனால் இதுவரை யாழ் மாவட்ட வெற்றிடங்கள் மட்டும் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றது. இதனால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதோடு மேற்படி பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் இலவு காத்தகிளி போலத் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே இதுவிடயத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் உடனடிக் கவனம் எடுத்து வெற்றிடத்தை நிரப்ப ஆவன செய்யவேண்டும் என வேண்டுகின்றேன்.

வராத்துப்பளை — க. தவரூபன்

# மீண்டும் நண்பகலில் நூலகம் திறக்கப்படுமா?

ஆசிரியர்
முரசொலி

இதுவரை காலமும் காலை 8மணி தொடக்கம் மாலை 6மணி வரையும் இயங்கி வந்த பண்டத்தரிப்பு பட்டின பொது நூல நிலையமும், வாசிகசாலையும் கடந்த வாரம் முதல் நண்பகல் 12 மணி தொடக்கம் 2மணி வரையும் மூடப்பட்டு வருகின்றது. இதனால் இந்நேரங்களில் நூல் நிலையத்தையும், வாசிகசாலையையும் பயன் படுத்த முடியாது பலரும் சிரமப்படுகின்றனர். மீண்டும் வழமை போல நண்பகல் நேரத்திலும் பண்டத்தரிப்பு பட்டின நூல் நிலையத்தையும், வாசிகசாலையையும் பயன் படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைஎடுப்பார்களா?

பண்டத்தரிப்பு — செல்வி சாந்தினி கந்தசாமி

# ரயில் நிலைய கள்ளன் நேற்று வசமாகப் பிடிபட்டான்

நேற்று அதிகாலை யாழ்ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி ஒன்று ரயில்வே ஊழியர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து குடும்பத்துடன் நேற்று அதிகாலை யாழ் வந்த பெண்மணி ஒருவரிடம் இருந்து சூட்கேசை தூக்குவதாக கூறிய நபர் ஒருவர் திடிரென சூட்கேசுடன் மறைந்து விட்டாராம்.

ரயில்வே ஊழியர்கள் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கையினால் அந்த நபர் இன்னொருவருடன் சேர்த்துக்கைது செய்யப்பட்டார். இருவரும் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (03)

# யாழ் மாவட்ட பல குடும்பங்கள் உணவு முத்திரை இழந்தன

யாழ் மாவட்டத்தில் பல குடும்பங்கள் உணவு முத்திரை பெறும் தகுதியை இழந்துள்ளதாக தெரியவருகின்றது, ஆசிரிய நியமனங்கள், மற்றும் வேலை வாய்ப்புகள் காரணமாகவே இந்த தகுதியை இழக்கின்றன.

700ரூபாவுக்குகுறைவாகமாத வருமானம் உள்ளவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்பட்டு வருகின்றது 700 ரூபாவுக்கு குறைவாக மாதவருமானம் பெறும் புதிய குடும்பங்களுக்கும் புதிதாக உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளது. (03

# ஏமாற்றிய ஏஜன்ஸிகாரர் வசமாக மாட்டிக்கொண்டார்

காலதாமதமின்றி தவணை அடிப்படையில் உரியவரிடம் பணத்தை கையளிக்குமாறு வெளிநாட்டு முகவர் ஒருவருக்கு கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது - கோண்டாவில் வடக்கு வாசியான ஒருவர் தன் மகனை ஜேர்மனிக்கு அனுப்பிவைக்கும் நோக்கத்துடன் இதே இடத்தை சேர்ந்த வெளிநாட்டு முகவர் ஒருவரிடம் 84 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்துள்ளார். பணம் கொடுக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் குறிப்பிட்டபடி பையனை ஜேர்மனிக்கு அனுப்பிவைக்கப்படாததுடன்;பணத்துக்கு எவ்வித முடிவும் அற்ற நிலையில் பணம் கொடுத்தவர் அங்கலாய்க்கலானார்.

நீண்டகாலமாக கொழும்பிலேயே சீவியம் நடத்தி வந்த மேற்படி முகவர் சில தினங்களுக்கு முன்பு சொந்தஊரான கோண்டாவிலுக்கு வந்த பொழுது இரு பகுதியினருக்குமிடையில் சச்சரவு ஏற்படலாயிற்று இந்நிலையிலேயே இப்பிரச்சினையில் தலையிட்ட கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச்சங்கம் விசாரணையை மேற்கொண்டதின் பின்பு, காலதாமதமின்றித் தவணை அடிப்படையில் முழுப்பணத்தையும் உரியவரிடம் கையளிக்குமாறு முகவருக்குத் தீர்ப்பு வழங்கியுள்ளது. (41)

பொலிஸாரின்

# பாகுபாடற்ற உயர்ந்த சேவைக்கு இருமொழி அறிவு அவசியம்

''தமிழ்ப் பொலிசார் சிங்களமும்; சிங்களப் பொலிசார் தமிழும் கற்றுத் தேறுவதன் மூலம், பாகுபாடற்ற உயர்ந்த சேவையாற்றக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு, கண்டி அஸ்கிரிய சர்வதேச விளையாட்டரங்கில் நடை பெற்ற மலையக இளைஞர்களுக்கான பொலிஸ் பயிற்சி நிறைவு விழாவிலே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்; பெருந் தோட்டத் தொழிற்துறை அமைச்சருமான; ரஞ்சன் விஜேரத்ன கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மலையகத்தில் சரித்திரத்திலேயே முதன் முறையாக, மலையகத்தைச் சேர்ந்த இளைஞர்களாகிய நீங்கள் அதாவது, மலைத் தோட்டத் தொழிலாளர்களினது மைந்தர்கள் பொலிஸ் துறைப் பயிற்சி பெற்று, இந்த நாட்டிற்கு இன, மொழி, மத, நிற வேறு பாடுகள் எதுவுமே அற்ற சேவையை வழங்குவதற்காக வெளியேறுகின்றீர்கள் நீதி, நியாயம், நேர்மை நிறைந்த உள்ளத்துடன் சமுதாய ஒற்றுமைக்கும், நாட்டு முன்னேற்றிற்கும் இடையூறு விளைவிக்கும் விரோதிகளை அடக்கி, ஒடுக்கி வெற்றிவாகை சூட வேண்டியவர்கள் நீங்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவை பொலிஸாராகிய உங்களுக்கு இன்றியமை தாத உயர் பண்புகளாக இருக்கவேண்டும்என்றார்.

# கோழித்தீன் தொழிற்சாலை மண்டைதீவில் அமையும்

யாழ். மாவட்டத்தில் கோழித்தீன் மற்றும் கால் நடைகளுக்கான தீனி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

இத் தொழிற்சாலை மண்டைதீவில் அமையவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தொழிற்சாலை இயங்கினால் வடமாகாணத்தில் தற்போது அதிகவிலையில் விற்பனை செய்யப்படும் மிருகங்கள் மற்றும் பறவைகளுக்கான தீனிகள் விலைகுறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ்ப்போட்டியில் மகளிர் சாதனை

இவ்வருடம் யாழ்.கோட்டக்கல்வி அலுவலகம் நடாத்திய தமிழ்த்தினப்போட்டியில் சுண்டிக்குளி மகளிர்கல்லூரி மாணவிகள் பின்வரும் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

ஆ.ஸ்ரீ.கார்த்திகா (இரண்டாம் பிரிவு) பேச்சுப்போட்டி முதலாம் இடம் சிந்துஜா போல் (இரண்டாம் பிரிவு) பரதம் தனி முதலாம் இடம். ம சகியந்தி (மூன்றும் பிரிவு) இசை இரண்டாம் இடம். இ. காயத்திரி (முதலாம் பிரிவில் ஊகிப்பு,முதலாம் இடம். சசௌமியா(இரண்டாம் பிரிவு) இசை முதலாம் இடம்,பு சர்மிளா(நான்காம் பிரிவு)முதலாம் இடம் புல்லாங்குழல்,

# சிவனொளிபாதம் சென்றோரிடம் ஆயுத முனையில் கொள்ளை

சிவனொளிபாதமலைக்கு பஸ்ஸில் சென்ற மாத்தளை யாத்திரிகர்களிடம் இனந்தெரியாத கோஷ்டியொன்று ஆயுதமுனையில் கொள்ளையடித்துள்ளது.

நாவலப்பிட்டி நகரில் இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தபோது ஆயுதமுனையில் பஸ்ஸை வழிமறித்த கொள்ளையர்கள் யாத்திரிகர்களிடமிருந்து பணம், நகை, என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றனர்.

# யாழ்தேவி மாட்டுவண்டில் கிளிநொச்சியில் மோதல்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற யாழ்தேவி ரயில் வண்டில் மீது மோதியது. கிளிநொச்சிக்கும் பரந்தனுக்குமிடையில் இச்சம்பவம் நடைபெற்றது.

மாட்டு வண்டில் மீது ரயில் மோதியது. வண்டில் சுக்கு நூறாகியது. எவருக்குமே காயமில்லை வண்டில் மாடுகளும் தப்பின இச்சம்பவம் வியாழன் காலை நடைபெற்றது. (11)

## அரிசிஆலை

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அரிசி ஆலையொன்றை விரைவில் நிறுவுவதென்று தீர்மானித்துள்ளது

சங்கானை மின்தறி ஆலைக்கு பக்கத்திலுள்ள கட்டிடமொன்றில் இந்த அரிசி ஆலை அமைக்கப்பட இருப்பதாக மேற்படி சங்கத்தின் தலைவர் திரு.வை செந்தில் நாதன் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (13)

# இன்றைய நிகழ்ச்சிகள்

### அரியாலையில்

அரியாலை சன சமூக நிலைய பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பொ. சுந்தரலிங்கம் தம்பதியினர் கலந்து கொள்வர்.

### யாழ்நகரில்

யாழ். விக்டோரியா வீதியிலுள்ள கலாலயா நிறுவனத்தில் 88-ம் 89-ம் ஆண்டுகளில் டிப்ளோமா மனைப்பொருளியல் பயிற்சி நெறி பயின்ற மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பி. ப 4 00 மணிக்கு அந்நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக திரு. சுப்பிரமணியம் (கல்வி அதிகாரி. தொழில் நுட்பபிரிவு, கல்வி திணைக்களம்) அவர்கள் கலந்து கொள்வார்.

## சுவையான செய்திகள்

# விரதம் வென்றது

சீனாவில் உள்ள சேங்சோவைச் சேர்ந்த நாற்பத்திரண்டு வயதான ஒரு பெண் 'கவான்—யின்' என்ற கடவுளின் துவாரம் போன்ற சிலைக்குள் நுழைந்து பதினொரு ஆண்டுகள், திருமணமான தன் மகனுக்கு ஒரு குழந்தை பிறக்கவேண்டும் என வேண்டி அதைவிட்டு வெளியே வராமல் இருந்தாள்! இப்படி ஒரு விரதம் இருந்த அவளுக்கு அந்தச்சிலையின் வாய் வழியாக உணவு கிடைத்ததாம். தன்னுடைய விரதம் நிறைவேறிய பிறகே சிலையை விட்டு அவள் வெளியே வந்தாள்,

# மணிமழை பொழிகின்றது

இந்தியாவின் மத்திய மாகாணத்தின், மாண்டலா வட்டாரத்தில் உள்ள 'பிஜோரி' என்ற கிராமத்திற் சில சமயங்களில் மழை பொழியும்போது வீதிகளில் பாசி மணிகள் பல விதமான அளவுகளில் வர்ணங்களிற் குவிந்து கிடக்குமாம்! அதுவும் மணிகளிற் துவாரமிடப்பட்டே இருக்கின்றதாம் கிராம வாசிகளோ இதைச் சேகரித்து விதம் விதமான அலங்காரப் பொருட்களைச் செய்து சீவியம் நடத்துகின்றனர்.

# தந்திரத்தால் தலை தப்பியது

ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு திருடன் சில ஆடுகளைத் திருடிச் சென்றதால் இவனின் தலையைத் துண்டிக்குமாறு அரசன் தீர்ப்பளித்தான். குற்றவாளி தான் பைபிளைப் படித்து முடிக்கும்வரை தனக்கு விதித்திருக்கும் மரண தண்டனையை ஒத்திப் போடுமாறு அரசனிடம் வேண்டினான். அரசன் ஒத்துக்கொண்டாலும் திருடன் திருப்தி அடையாது மறுமுறையும் ஓர் வேண்டுகோள் விடுத்தான். அதாவது ''நான் ஒரு நாளைக்கு ஒரு வரிதான் படிப்பேன்'' என்றான். அரசனும் இணங்கினான் இதனால் திருடன் முன்னூறு ஆண்டுகள் வாழ முடிந்தது அவன் தண்டனையிலிருந்து தப்பினான். வயதடைந்ததும் இயற்கை மரணமடைந்தான்.

# உள்ளகப்பட்டபின் பயிற்சி நெறிக்கு பட்டதாரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

கல்வி காலசார அலுவல்கள் தகவற்துறை அமைச்சு உள்ளக பட்டபின் கல்வித்தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அரசாங்கப் பாடசாலைகளில், ஆசிரிய கலாசாலைகளிலும், கல்விக் கல்லூரிகளிலும், பிரிவெனாக்களிலும் கடமை புரியும் பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி அதிபர்கள், இலங்கைக் கல்விச் சேவைப் பட்டதாரி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து 1990/1991 ஆம் கல்வி ஆண்டுக்கான ஒருவருட உள்ளகக் கல்வித் தகுதித்தேர்வுப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன, தமிழ்மொழி மூலமான பயிற்சி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

தமிழ்ப்போதனா மொழி மூலமாக விண்ணப்பிப்பவர்கள் இலங்கை பிரஜையாகவும்; 1-4-1990 இல் 50 வயதுக்கு மேற்படாதவராகவும்; அங்கீகரிக்கப்பட்ட ஒருபல்கலைக்கழகப் பட்டதாரியாகவும் இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பட்டம் பெற்ற பின்னர் சேவையிற் சேர்ந்த ஆசிரியர்கள், அரசினர் பாடசாலை, ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, கல்விக் கல்லூரி, பிரிவேனா ஒன்றிற் பட்டதாரி ஆசிரியராக 01, 04. 1990 அன்று மூன்று வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவம் பெற்றும்; அன்றேல், பட்டம் பெறுவதற்கு முன் சேவையிற்சேர்ந்த ஆசிரியர்கள் அரசினர் பாடசாலை, அல்லது, ஆசிரியக் கலாசாலை ஒன்றில் 1 04.1990 அன்று 5 வருடங்களுக்கும் குறையாத தொடர்ச்சியான கற்பித்தல் அனுபவம் பெற்றிருப்பதுடன், குறைந்தது மூன்று வருடங்கள் பட்டதாரி ஆசிரியராகக் கற்பித்தல் அனுபவம் பெற்றும் இருத்தல் வேண்டுமெனவலியுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்படிவங்கள் யாவும் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமையத் தட்டச்சிற் பொறிக்கப்பட்டும்; 25-ரூபா பெறுமதியான முத்திரை உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, விண்ணப்பப்படிவத்தில் ஒப்பம் இடுவதன் மூலம் அது செல்லுபடியற்றதாக்கப் பட்டும்; விண்ணப்பம் ஒப்பமிடும் திகதியன்று விண்ணப்பதாரர் சேவையிலுள்ளதை உறுதிப்படுத்தியும்; விண்ணப்பக்கடிதத்தின் இடது பக்க மேல் மூலையிலே பட்டப்பின் கல்வித் தகுதித்தேர்வுப்பயிற்சி நெறி- 1990/1991 என அடையாளமிடப்பட்டும் 6. 4. 1990 அன்றோ, அதற்கு முன்பாகவோ பதிவஞ்சல் மூலமாகப் பரீட்சை ஆணையாளருக்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை 28. 04. 90 இல் கொழும்பில் நடைபெறும். எழுத்துப் பரீட்சையில் குறித்த புள்ளிகளை பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

---

கல்வியியல் பட்டப் பின் உள்ளகக் கல்வித் தேர்வுப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கான் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை 1990/1991

## மாதிரி விண்ணப்பப் படிவம்

விண்ணப்பிக்கும் பாடநெறி ............... ............
பல்கலைக்கழகம்........................................
(ஒன்று மட்டும்)
போதனா மொழி........................................

விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியின் பெயர்—
போதனா மொழி—
01. (அ) பெயர் (முதலெழுத்துக்களுடன் சொந்தப் பெயர் முதலில்)
(திரு/திருமதி/செல்வி/வண)—
(ஆ) முழுப் பெயர்—
02. முகவரி— (அ) அலுவலக—
(ஆ) சொந்த—
03. சாகியம்—
04 குடியியல் அந்தஸ்து—
05. பிறந்த திகதி—
01 - 04 - 90 அன்றுள்ளபடி வயது—
06. கல்வி கற்ற பல்கலைக்களகங்கள் (காலவரன் ஒழுங்கில்)—
07. பட்டம்—
பாடங்கள்—
போதனா மொழி—
பல்கலைக்கழகம்—
பட்டம் பெற்ற வருடம்—
08 (1) தற்போதைய நியமனம்—
(பதவியின் தரத்தைக் குறிப்பிடவும்)
(2) இப்பதவிக்கான நியமனத் திகதி—
(3) இலங்கைக் கல்விச் சேவையில் இருப்பின் பதவி, அப்பதவியின் தரம் நியமனத் திகதி என்பன—
09. (1) மொத்தக் கற்பித்தல் அனுபவமும்—
வருடம்— மாதம்—
(2) சேவை விபரம்—

| ஸ்தாபனத்தின் பெயர் | சேவைக் காலம் | கற்பித்த பாடங்கள் | போதனா மொழி |
|---|---|---|---|
| | | | |

10. விண்ணப்பதாரரின் வேறு விசேட தகைமைகள் வெளியீடுகள் என்பன—
11. (1) முன்னர் பெறப்பட்ட படிப்பு லீவு சம்பந்தமான விபரங்கள்—
(2) முறிக்குரிய காலம்—
(3) முறி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா?—
12. விண்ணப்பதாரிக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஏதும் உண்டா? அப்படியாயின் விபரங்கள்—
13. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையெனவும் விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டிருக்கும் ரூபா 25 பெறுமதியான முத்திரை முன்னர் ஒரு போதும் உபயோகிக்கப்படாதவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இப்பரீட்சை சம்பந்தமான எல்லா விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஒழுகுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

..............................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

முத்திரை இங்கு ஒட்டி
செல்லுபடியற்றதாக்கவும்

திகதி—
14. அதிபரின் / பீடாதிபதியின் / திணைக்களத் தலைவரின் அத்தாட்சிக் கூற்று—
விண்ணப்பதாரியாகிய திரு / திருமதி / செல்வி / வண ................ அவர்கள் ............
திகதி எனது பாடசாலையில் / கல்விக் கல்லூரியில் / அலுவலகத்தில் ஆசிரியர் / உத்தியோகத்தர் எனவும், அவர் என் முன்னிலையில் ஒப்பமிட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.
அதிபரின் / பீடாதிபதியின்/திணைக்களத் தலைவரின் ஒப்பம்—
அதிபரின் /பீடாதிபதியின் / திணைக்களத் தலைவரின் பெயர்—

..............................................
அலுவலக முத்திரை
கல்விக் கல்லூரியின் / பாடசாலையின் / திணைக்களத்தின் முகவரி—
திகதி —

---

# றமழான் சிந்தனைகள்

## பாவங்கள்

"இறை தூதர் அவர்களே; இறைவனிடத்தில் மிகக் கொடிய பாவம் எது?' என ஒருவர் கேட்டார். "உம்மைப் படைத்த இறைவன் ஒருவன் இருக்க நீர் எவரையேனும் எப்பொருளையேனும். அந்த இறைவனோடு இணை சேர்ப்பது தான்'' என பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் அளித்தார்கள். "அடுத்தது எது?'' என மீண்டும் அவர் கேட்கிறார். "உண்ணும் உணவிலே பங்குக்கு வந்து விடுவார் என அஞ்சித் தான் பெற்ற குழந்தைகளைக் கொன்று விடுதல்'' என்றார்கள் பிறகு என்ன? என்று அப்புறமும் கேட்கிறார் "உமக்கு அருகில் வசிக்கின்ற அண்டை வீட்டாரின் மனைவியோடு விபசாரம் புரிதல் என்றார்கள் நபி (ஸல்) அவர்கள் மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அல்லாஹ் தடுத்த காரியங்களை செய்து பாவங்களில் உழல் பவனை அல்லாஹ் தண்டித்துப் பார்க்காமல் விடுவதில்லை''

## சுந்தர் இன்று பதவியேற்பார்

தற்சமயம் மன்னார் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரியும் திரு சுந்தரலிங்கம் இன்று முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளராக தனது கடமையை பொறுப் பேற்கவுள்ளார். இவர் அண்மையில் முதலாம் தர பதவி உயர்வு பெற்றவர் என்பது குறிப் பிடத்தக்கது.

## பிச்சை எடுப்பதைவிட...

சிறு கூட்டம் என்ன என்று அறிய நாமும் அக்கூட்டத்திற்குள் எட்டிப்பார்த்தோம் ஒரு பிச்சைக்காரனைக் பிடித்து இரண்டு வாலிபர்கள் நையப் புடைத்துக்கொண்டிருந்தனர். அந்தப் பிச்சைக்காரன் பார்வைக்கு பழைய அழுக்கேறிய உடைகளை அணிந்திருந்தான். அவனுடைய உடைகளைக் கழற்றிய போது உள்ளே வேறு நல்ல ஆடைகள் அணிந்திருந்ததைக் கண்டுபலரும் அதிர்ச்சிஅடைந்து விட்டனர் அதிகாலையில்யாழ் தேவிப் புகையிரதத்தில் பயணம் செல்வதற்காகச் சென்று கொண்டிருந்த ஒருபெண்ணின் கான்பாக்கைப் பறித்துக் கொண்டு ஓடும் போது அவ்வழியே வந்த இரண்டு சிங்கள வாலிபர்களால் பிச்சைக்காரன் பிடிபட்டு நையப் புடைக்கப் பட்டான்.

அப் பெண்ணின கான்பாக்கில் எவ்வளவு பணம் இருந்தது தெரியுமா? எழுபத்தையாயிரம்!!......... இந்த பணம் பறிபோகாமல் காப்பாற்றிக் கொடுத்த அந்த இரண்டு சிங்கள வாலிபர்களையும் மனதாரப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப்போது தலைநகரில் ஒன்றை அவதானிக்க முடிகின்றது. சிங்களவர் தமிழரை வித்தியாசமாக நோக்கும் மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது தலைநகரில் வருவோர் யாரையும் எளிதில் நம்பி விடாதீர்கள் நகரில் ஏமாற்றுப்பேர்வழிகளே அதிகம் நல்லவன் போல் நடிப்பார்கள், பிச்சைக்காரன்போல் பாசாங்கு செய்பவர்கள் நவீன இளைஞர் போல காட்சி தருவார்கள்.

நகரில் போலிகளே அதிகம்... போலிகளை நம்பி ஏமாறாதீர்கள். போலிகளை இனங்காண்பது உங்கள் விவேகத்தைப் பொறுத்தது..... ஏமாறிய பின் கவலைப் படுவதில் பயன் எதுவும் இல்லை.

## பொற்பதிவீதியில் நினைவுத்தூபி

இதுநாள்வரை வீர மரணம் அடைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஞாபகார்த்தமாக பொற்பதி வீதி அம்பத்தள என்னுமிடத்தில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கொக்குவில்கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்தினரால் அமைக்கப்பட்டுவரும் இந்த நினைவுத் தூபிக்குஏறக்குறைய 25 ஆயிரம்ரூபாய் செலவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(41)

## மகாபொல புலமைப்பரிசில்

வடக்கு. கிழக்கிலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 591 மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு தெரிவு செய்யப் பட்டு விழாவிற்கு அழைக்கப் பட்டுள்ளார்கள்.

1988—1989 ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப் பட்ட மாணவர்களில் 3 ஆயிரத்து 400 பேருக்கு மகா பொல புலமைப் பரிசில் உதவி நிதி கிடைத்துள்ளது.

A/L 90
CHEMISTRY - திரு. மகாதேவா
சனி, ஞாயிறு, நடைபெறும்
ORGANIC வகுப்புக்களுடன் மேலதிக விடுமுறைக்கால வகுப்புக்கள்
திங்கள், புதன், வெள்ளி, 11-00 மணி
PHYSICAL - CHEMISTRY
ஆரம்பம்: 02-04-1990
குறிப்பு:- இடநெருக்கடி காரணமாக அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி; யாழ்ப்பாணம்
04006

● 30 வருடமாக ஊழியர் மதிப்பீட்டுத் தொகை மாற்றப்படாததால்

# ஆசிரியர், மாணவர் தொகை அதிகரிப்பு

# ஆனால் ஊழியர் தொகையில் மாற்றமில்லை

1960-ல் அரசு பாடசாலைகளைப் பொறுப் பேற்றபோது பாடசாலைகளுக்கும், கல்வி அலுவலகங்களுக்கும் தேவையான ஊழியர்களை மதிப்பீடுசெய்தது 60-ம் ஆண்டுக்குபின் இதுவரை ஊழியர்களின் நிர்ணயத்தொகை அதிகரிக்கப்படவில்லை என்று மட்டு கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

60-ம் ஆண்டில் சிறிய பாடசாலை ஒன்று இன்று கல்லூரியாகத்தரம் உயர்த்தப்பட்டிருக்கலாம் ஆனால் அந்தக் கல்லூரிக்குத் தேவையான சிற்றூழியரையோ, காவலாளியையோ அல்லது எழுதுவினைஞரையோ நியமிக்கமுடியாத நிலைகாணப்படுகிறது.

60-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு பாடசாலை வளர்ச்சியடையக் கூடாதா? ஆகவே ஊழியர் நிர்ணயத் தொகையை [Cadre Position] மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

இதேவேளை ஆசிரியர்களின் தொகை அதிகரித்ததனால் கல்வித் திணைக்களத்தில் வேலைப்பளு அதிகரித்திருக்கிறது ஆனால் ஊழியர்களின்தொகை அதிகரிக்கப்படவில்லைஎன்றார்.

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின்செயலாளராகதிரு சற்குணராசா பதவிஏற்றபின் முதல் தடவையாக மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திற்கு விஜயம் செய்து மேற்படி ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக மாநாடு ஒன்றை நடத்தினர்.

இம்மாநாட்டில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் உரையாற்றும் போதே மேற்படிதெரிவித்தார்

மாகாண சபையால் ஊழியர் மதிப்பீட்டுத் தொகையை (Employees Cadre) மாற்றியமைக்க முடியாது. இதை மாற்றி அமைக்கும் உரிமை திறைசேரிக்கு மட்டுமே உண்டு என வடகிழக்குமாகாணகல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ. சற்குணராசா தெரிவித்தார். (05)

## காரைநகர் சாலையினரின் தீவுப் பகுதிக்கான பஸ் சேவை

தீவுப்பகுதி மக்களினது பிரயாணக் கஷ்டத்தை ஓரளவில் போக்கிக் கொள்வதற்காக சில ஏற்பாடுகளை செய்து கொடுத்துதவ வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முன்வந்துள்ளது

தினமும் காரைநகர் சாலையிலிருந்து அதிகாலை 5 00 மணிக்கு ஒருபஸ்வண்டி காரைநகர் இறங்குதுறையில் இருந்து பாதையில் ஏற்றி ஊர்காவற்றுறை இறங்குதுறைக்குக் கொண்டுவரப்படும் அங்கிருந்து காலை 5.30 மணிக்கு பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு 780 பாதையூடாக சாட்டி வழியாக யாழ்ப்பாணம் செல்லும்.

இந்த பஸ் தொடர்ந்து பகல் முழுவதும் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை சேவையில் ஈடுபடும்.

மாலையில் கடைசி பஸ் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் சென்று யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் சாலைக்குச் சென்றுவிடும்.

## நயினாதீவு கடற்படையினர் சோதனைகளை நீக்கியுள்ளனர்

நயினாதீவில் கடற்படையினரின் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. குறிகாட்டுவான் துறையிலிருந்து நயினாதீவு செல்லும் அனைத்து மோட்டார் படகுகளும் நேரடியாக வங்களாவடித் துறைக்கும், கோவில் முன் உள்ள இறங்கு துறைக்கும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடற்படையினர் தமது பாதுகாப்பு கருதி கடந்த 3 வருடங்களாக மூடி வைத்திருந்த நயினாதீவிலுள்ள பிரதான வீதியையும் பொது மக்களது பாவனைக்காகத் திறந்து விட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (19

## மட்டு-யாழ் இரவு பஸ்

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான இரவுநேர விசேட டஸ்சேவை இன்றிரவு ஏழு மணிமுதல் ஆரம்பிக்கப் படுகிறது. (05)

## சுந்தருக்கு வரவேற்பு

மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களுக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் இம்மாதம் இரண்டாம் திகதி (2 . 4 . 90) காலை வரவேற்பொன்றளிக்கப்படும்.

யாழ் கல்வித் திணைக்கள ஊழியர் நலன்புரிக் கழகத்தினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். [19]

### கருணாநிதி...

தில் கச்சதீவு, மீனவர் பிரச்சனை குறித்தும் பேச்சுகள் நடாத்துவார் என தி மு க வட்டாரங்கள் தெரிவித்தன.

### 50 வீதசமபள...

ராஜா, தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில் இந்த பன்னிரண்டரைக் கோடி ரூபாவை மத்திய அரசு தர மறுத்து விட்டது. திறைசேரியும் இதற்கென நிதி ஒதுக்க மறுத்துள்ளது

ஆனால் 89/49 இலக்க சுற்றறிக்கையின்படி ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் இக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். முழுத் தொகையையும் உடனடியாக வழங்கா விட்டாலும் ஜூலை மாதத்திலிருந்து பகுதி பகுதியாக அதனை நாம் வழங்குவோம் எனவும் தெரிவித்தார் (05)

### அதிபர்களை...

போட்டிப்பரீட்சையில்- கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டின் எல்லாப் பாகங்களில் இருந்தும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர்களும் இப்போட்டிப் பரீட்சைக்கு தோற்றியமை குறிப்பிடத்தக்கது.

### பட்டதாரி...

கலாசார அமைச்சின் பதில் செயலாளர் இ.சற்குணராஜா தெரிவித்துள்ளார்.

சில பிரதேசங்களில் இவர்களுக்கு நியமனம் வழங்கப் பட்டபோது அவ்வப் பகுதி கல்விப் பணிப்பாளர்களால் இவர்களது சம்பளம் பற்றி உறுதியளிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

முரசொலி கடிதம் கொழும்பு சென்றதால் பலன்

## மெயில் ரயிலில் உறங்கலிருக்கை யாழ்ப்பாணத்தில் அதிகளவு பதிவு

வடபகுதிக்கான இரவு தபால் ரயிலின் உறங்கலிருக்கை ஆசனங்களில் குறிப்பிடடளவு யாழ் புகையிரத நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை யாழ் புகையிரத நிலையத்தில் உறங்கலிருக்கை ஆசனங்கள் பதிவு செய்யப்பட அனுமதிக்கப்பட்டிருந்த போதும் கொழும்பில் இந்த ஆசனங்களுக்கான பதிவுகள் அனைத்தும் ஏற்கனவே பூர்த்தியாகி விடுவதால் யாழ் புகையிரத நிலையத்தில் ஆசனப் பதிவு மேற்கொள்ள வரும் பிரயாணிகள்ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டு வந்தது.

இது தொடர்பாக முரசொலி ''உறங்கலிருக்கைப் பதிவில்ஏன்இந்தப்பாகுபாடு'' என்ற தலைப்பில் வெளியிட்ட கடிதம் யாழ் புகையிரதநிலைய அதிபர் திரு. ஏ. மயில்வாகனத்தினால் கொழும்புரயில்வே திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆசனங்களுக்கான முன் கூட்டிய பதிவுகள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் புகையிரத நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

## வானொலி நாடக உரைச்சித்திர கலைஞர்கள் 54 பேர் தெரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் திரு வீ. ஏ. திருஞானசுந்தரம் முரசொலிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டவாறு வானொலி நாடகங்கள், உரைச்சித்திரங்கள் என்பனவற்றில் பங்குபற்றுவதற்கு ஐம்பத்திநாலு தமிழ் கலைஞர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் இருந்து விண்ணப்பித்த 600 பேரில் 284 பேர் தெரிவுப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர், இவர்களில் 134 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு 54 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயிற்சி அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் முரசொலிக்கு தெரிவித்தார்:

இவர்களுக்கான தெரிவுக் குழுவில் முஸ்லிம் சேவைப் பணிப்பாயர் ஜனாப் குத்தூஸ் மரிக்கார் ஒய்வு பெற்ற நாடக கட்டுப்பாடதிகாரி ரி, ஏ, சிவஞானம், ரூபவாகினிக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி உதவிப்பணிப்பாளர் பி, விக்கினேஸ்வரன் ஆகியோர் இடம் பெற்றனர், (09)

## பிரதி கல்விப்பணிப்பாளர்கள் வடக்குகிழக்கில் தரம் உயர்வு

(மட்டக்களப்பு)

வடக்கு, கிழக்கிலுள்ள பிரதி கல்விப்பணிபாளர்கள் மாவட்ட கல்விப்பணிப்பாளர்களாக தரம் உயர்த்தப்படுவார்கள் என வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ. சற்குணராசா தெரிவித்தார்.

பிரதி கல்விப்பணிப்பாளர்களாக கடமையாற்றுபவர்கள் முன்னர் கல்விப்பணிபாளர்களாக கடமையாற்றியவர்களின் அதே பொறுப்புகளையே வகிக்கிறார்கள்: ஆகவே அவர்களை மாவட்டகல்விப் பணிப்பாளர்களாக நியமிப்பதே பொருத்தமானது என அவர் மேலும் தெரிவித்தார் (05)

சித்திரைப் புத்தாண்டு

உதை பந்தாட்டப் போட்டி

முரசொலி

அனுசரணையுடன்

யாழ். உதவி அரசாங்க அதிபர்

நடாத்தும்

ஒரு அணியில் 7 பேர் கொண்ட

உதை பந்தாட்டப் போட்டி

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடைபெறுகிறது

போட்டியிற் கலந்துகொள்ளவிரும்பும் கழகங்கள் யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் உடனே தொடர்புகொள்ளவும்.

காலமானார்

திருமதி கண்மணி துரைராசா

காரைநகர் 1 ஆம் கட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கண்மணி துரைராசா காலமானார். அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் துரைராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியை அம்பலவாணர் சின்னப்பிள்ளை (தையலம்மா) யின் அன்பு மகளும். காலஞ்சென்ற இராசையாவின் அருமைச் சகோதரியும், திருமதி சின்னம்மா இராசையாவின் அன்பு மைத்துனியும், திருமதி குணமணி அரியரத்தினம், அல்பிரட் அமிர்தநாயகம் (இங்கிலாந்து) காலஞ்சென்ற திருமதி ஏஞ்சல் கிரி ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு. அரியரத்தினம், திருமதி இரட்ண ஜீவகி அமிர்தநாயகம் (இங்கிலாந்து), திருகிரி (இங்கிலாந்து) ஆகியோரின் சிறிய தாயாரும், அரீன், ஷெரீன், நோட்டன் (UK), ஜொஸபின் (UK) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவர் அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஞாயிற்றுக்கிழமை (01-04-90) பிற்பகல் 3 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று சாம்பலோடை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யபடும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

1 ஆம் கட்டை, காரைநகர்.

சி. துரைராசா (கணவர்) இளைப்பாறிய ஆசிரியர்

04012

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 01-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது